008

M. 2026. குரோதனஹு வைகாசிமீ June 1925

...CE OF THE REGIS... OF BOOKS
No.
20 AU... 25

ஓம்

# சன்மார்க்க பானு



தொகுதி 1 பகுதி 5

VOL I.] SANMARGA BHANU [No. 5.

பொருளடக்கம். பக்கம்.

1. கடவுள் வணக்கம் ... ... ... 129
2. கல்விப் பயன் ... ... ... 130
3. புருஷார்த்தம் ... ... ... 134
4. சிறுவரைச் சீர்திருத்தும் முறை ... 137
5. மாதரும் குடும்பங்களும் ... ... 138
6. தியானம் ... ... ... ... 142
7. உயர்ந்த செல்வம் (சிறுகதை) ... 144
8. பழையது ... ... ... ... 146
9. வேதாந்த சாஸ்திரார்த்த சங்கிரக வினாவிடை ... ... 148
10. ஈப் பகை ... ... ... ... 152
11. அகத்திய இலக்கண வினாவிடை ... 153
12. பெட்டிமனிதன் ... ... ... 156

SB

**Editor: Pandit P. Srinivasalu Naidu.**

Printed by M. Ramanujachariar, at the Victoria Jubilee Press, Chittoor, and published at Ranipet by Pandit P. Srinivasulu Naidu.

# "சன்மார்க்க பானு"

## சந்தா விவரம்.

ரூ. அ. ப.

| | | |
|---|---|---|
| வருஷம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் ... | 1—0—0 |
| | பினாங்கு, சிங்கபூர் முதலிய வெளிநாடுகளுக்கு | 1—4—0 |
| | தனிச் சஞ்சிகை ... ... | 0—2—0 |

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எப்போது சேர்ந்தாலும் அந்த வருஷ பிப்ரவரிமாத முதல்கொண்டு கணக்கு வைக்கப்பட்டு தைமாத சஞ்சிகை முதல் சேர்த்தனுப்பப்படும்.

| | | |
|---|---|---|
| ஜீவியசந்தா | இந்தியா, பர்மா, சிலோன் ரூபா. | 15-0—0 |
| | வெளி நாடுகளுக்கு ... ... | 20-0—0 |

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒரு மாதத்திற்கு | ரூபா. | 10-0—0 |
| அரைப் பக்கத்திற்கு | ,, | ,, | 6—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 3—0—0 |

நீண்டகால விளம்பரத்திற்கு விகிதம் சிறிது குறைக்கப்படும். விகிதத் தொகை முழுதும் முன்பணமாய் அனுப்பப்படவேண்டும்.

பத்திராதிபர்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வட ஆற்காடு).

உ

ஓம்.

பரப்ரஹ்மணே நம:

# சன்மார்க்க பானு

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"—(குறள்)

*All Rights Reserved.*

கற்றை 1 } குரோதன ௵ வைகாசி ௴. { கதிர் 5

## கடவுள் வணக்கம்

எத்தனை விதங்கள்தான் கற்கினு கேட்கினும் என்
　　இதயமு மொடுங்கவில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவும் மாறவில்லை
　　யாதினும் மபிமானமென்
சித்தமிசை குடிகொண்டது ஈகையோ டிரக்கமென்
　　சென்மத்து நானறிகிலேன்
சீலமொடு தவவிரத மொருகனவி லாயினும்
　　தெரிசனம் செய்துமறியேன்
பொய்த்தமொழி யல்லால் மருந்திக்கும் மெய்ம்மொழி
　　புகன்றிடேன் பிறர்கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
　　பொருந்திடாப் பேதைநானே
அத்தனை குணக்கேடர் கண்டதா கேட்டதா
　　அவனிமிசை யுண்டோசொலாய்
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
　　ஆனந்த மானபரமே.

குலமி லான்குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமி லான்றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்தும்
இலமி லான்மைந்தர் மனைவியில் லானெவ னவன்ச
சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தகுமே.

# சன்மார்க்கபானு.

குரோதன ௵ வைகாசி ௴.

## கல்விப் பயன்.

---

இவ்வுலகத்தில் எல்லாத் தொழில்களும் பயன் நோக்கியே செய்யப்படுகின்றன. பயனை எதிர்பாராத காரியமே யில்லை. பயனை மனத்திற்கொண்டு செய்யப்படும் காரியந்தான் செவ்வையாக நடைபெறும். இன்றேல் அத்தொழில் தலைதடுமாறி சீர்குலையும். ஆகையால் கல்வியும் ஓர் பயனைக் கருதியே கற்கப்படவேண்டும் என்று ஏற்படுகிறது. அப்பயன் யாது? நாம் ஏன் கல்வி கற்க வேண்டும்? இக்கேள்விகளுக்கு என்ன விடை!

கல்வி கற்கும் மாணாக்கர்களும் அவர்களுடைய பெற்றோரும் இக்கேள்விகளுக்குத் தயங்காமல் பதில் கூறிவிடுவர். அஃதென்ன? 'பணம் சம்பாதித்து ஜீவனம் செய்ய' என்பதே. 'கோடி வித்யலு கூடி கொரகு' என ஓர் பழமொழியும் தெலுங்கில் உண்டு.

இது சரியான விடைதானா? இதுதானோ கல்விப் பயன்? கல்வி யுடையோரில் பலர் ஏழைகளாய் கல்வி யில்லாச் செல்வர்களிடம் சென்று அவர்கள் தயவிற்குக் காத்திருக்கக் காண்கின்றோமாகையால் இதுசரியான விடையாகாது.

கல்வியானது அறியாமையை யகற்றி அறிவை வளர்ப்பதாகையால் அதுவே பயன் என்றும் சிலர் கூறுவர். அப்படியானால் கல்வி

யுள்ளவர்க ளெல்லோரும் பொய்பேசுதல், பிறர் பொருளை யபக ரித்தல், வஞ்சனை, பொறாமை, கோபம், லோபம், முதலிய தீய குணங்க ளில்லாதவர்களா யிருத்தல் வேண்டும். பெரும்பாலோர் இவ்வாறிருப்பதாகக் காணப்படவில்லை. பல இடங்களில் பெரிய பெரிய குற்றங்களைச் செய்பவர்க ளெல்லாம் மிகவும் கற்றவர்களாக வே யிருப்பது கண்கூடு. இவர்கள் அறிவுடையவர்கள் தானே. இச் சந்தர்ப்பத்தில் 'அறிவு' என்பது, எவ்வகையாலேனும் பணம் சம்பாதிக்கும் வழியறிதல், பிறரை ஏமாற்றும் வித மறிதல், மெய் யைப் பொய்யாகவும் பொய்யை மெய்யாகவும் மாற்றி மெய்ப்பிக்க அறிதல் முதலிய தகாத செய்கைகளைச் செய்யும் தீய அறிவுக்கும் வழங்கப் படுகிறது.

தீய காரியங்களைச் செய்வோர்களை அறிவுள்ளவர்க ளென்று யாரேனும் கூறுவரோ எனச் சிலர் நினைக்கலாம், அப்படி நினைக்கச் செய்வதுதான் அறிவின் வல்லமை. கல்வி யறிவுள்ளவன் செய்யும் தீய காரியங்களுக்கும் அஃதில்லாதவன் செய்யும் தீய காரியங் களுக்கும் வித்தியாச முண்டு. அதாவது கல்வி யில்லாதவன் செய்யும் வகை யறியாமல் அகப்பட்டுக்கொண்டு விழிப்பான். கல்வி யறி வுள்ளவன் பிறர் கண்டறிய வியலாதபடி பக்குவமாகச் செய்து கொண்டு தைரியமாகத் திரிவான்; அகப்பட்டுக்கொண்டாலும் தன்மீது குற்றஞ் சாராதபடி தந்திரங்கள் செய்து தப்பிவிடுவான்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு

என்று நாயனர் கூறியவாறு, 'கல்வியானது அறிவை வளர்க்கும்' என்பது உண்மையே யாயினும், அது ஒருவனிடத்து இயல்பாய் அமைந்துள்ள அறிவையே வளர்க்குந் தன்மை யுடையது. நற் குண முள்ள வொருவன் கல்வி கற்றால் அவனறிவு நன்மார்க்கத்தில் விருத்தி யடைந்து விளங்கும். பொய்பேசும் சுபாவ முடையவ னுடைய கல்வியோ

பொய்யுடை யொருவன் சொல்வன் மையினல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே

என்னும் வாக்கியத்திற் கிலக்காகி, அப்பொய்யைப் பிறர் நம்புமாறு செய்யும் ஆற்றலை யளிக்கும். இதுநோக்கியே 'நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றுந்தன், உண்மை யறிவே மிகும்' என்றார் பெருநாவலர்.

ஆதலால் கல்விகற்போர் அக் கல்வியா லடையவேண்டிய நற் பயனை யறிந்து அதனை யடையும் நோக்கத்துடன் கற்கவேண்டும். அப்பொழுதுதான் கல்வியின் பயனை யடைதலாகும்.

அறிவாவது மனத்தை தீயவழிகளிற் செல்ல விடாது நன் மார்க்கத்தில் செலுத்துவதாம். இவ்வித அறிவை அடைதலே கல்வியின் பயனும். கல்வி பலவகைப் பட்டதா யிருந்தாலும் அற நூல், நீதிநூல் முதலிய அறம் பொரு ளின்பம் வீ டென்னும் உறுதிப் பொரு ளுணர்த்தும் நூல்களைக் கற்றலே கல்வி யென்னப் படும். அவ்வாறு கற்ற நூல்களிற் கூறிய வாறு தீவினைக்குப் பயந் து நல் லொழுக்கத்தைக் கடைப் பிடித்து நல்ல வழியிற் பொரு ளீட்டி நன்மார்க்கத்திற் செலவிட்டு இல்லற நெறி வழாது நடத் துதலும், மறுமையில் முக்தி யின்பத்தை யடைதலு மாகிய சன் மார்க்கமே கல்வியின் பயனாகும்.

'அறம்பொரு ளின்பம்வீ டடைதல்நூற் பயனே'. என்றும்

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக;' என்றும்

ஆன்றோர் அருளி யிருத்தலையு மறிக.

மெய்யுணர்வை யுடையவனாகிய கடவுளின் திருவடிகளைத் தொழுதலே கல்வி யறிவின் பயன்; அங்ஙனம் தொழாரானால் அக்கல்வி யறிவினா லுண்டாம் பயன் யாதுமில்லை: என்னுங் கருத் தமைத்துத் தெய்வப்புலவர் திருவாய் மலர்ந்த

'கற்றதனா லாய பயனென்கொல்? வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்'.

என்றும் குறளே கல்வியின் பயன் இது வென்று விளக்கப் போது மானது. இதையே தாயுமானவரும்

> கல்வி கற்றதும் கேள்வி கேட்டதும் நின்னைக்
> கண்டிடும் பொருட்டன்றோ காணே ? என்னும்

பாட்டால் குறித்துள்ளார்.

இவ்வாறு உண்மைப் பயனை யறியாது வெறும் வயிற்றுப் பிழைப்புக்காகவும் அதிகாரத்துக்காகவும் கற்கப்படும் கல்வி நற் பயனை யளிக்காமற் போவதோடு பலவித விபரீதங்களுக்கும் தீமை களுக்கும் காரணமாகும். குடிநீருக்கென்று வெட்டப்படும் குள மானது உடம்பு குளித்தல் முதலிய காரியங்களுக்கும் உபயோகப் படுவதுபோல, சன்மார்க்கங்களை யறிந்து நடப்பதற்காகக் கற்கப் படும் கல்வியானது உத்தியோகம் செய்தல் முதலிய பிற காரியங் களுக்கும் உபயோகப்படு மாதையால் முக்கிய பயனாகிய நல் லொழுக்கத்தைக் கைவிடாமல் வியாபாரஞ் செய்தலும் அதிகாரம் வகித்தலும் இவற்றின் மூலமாகத் திரவியந் தேடுதலும் தகாத காரியங்களல்ல. இவற்றின் பொருட்டு நல்லொழுக்கந் தவறி நடப்பது நல்லதல்ல; அது கல்வியின் பயனாகாது. அவ்வாறு நடப்பவர்களை விடக் கல்லாதவர்களே நல்லவர்களாவர். கையில் விளக்கை வைத்துக்கொண்டே கிணற்றில் விழுபவனை விட விளக் கில்லாமல் கிணற்றில் விழுபவன் நல்லவனல்லவா? இதுபற்றியே தாயுமானவர்,

> கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
> கற்றுமறி வில்லாத வென்

கன்மத்தை யென்சொல்கேன் மதியையென் சொல்லுகேன்

என்றார்.

ஆகையால், சகோதர சகோதரிகளே ! கல்வி கற்பது பெரிய காரியமல்ல. ஏதோ சில குறிப்பிட்ட புஸ்தகங்களைப் படித்து

விட்டால் வித்துவான்களாகவும் பட்டதாரிகளாகவும் ஆய்விடலாம் அதனல் விசேஷித்த நன்மை யுண்டாய்விடாது. படித்தபடி நடக்க கற்றுக்கொள்ள வேண்டும். அதுவே நற்பயனளிப்பது. பாடசாலைச் சிறுவர்களுக்குப் பெற்றோர் கல்வியின் பயனை யறிவித்து அம்முறையில் அவர்களைக் கற்கச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் நமதுநாடு மற்றதேசத்தவர்க்குச் சன்மார்க்கத்தைப் போதிக்கும் படியான பழைய உன்னத நிலை யடையும். எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக.

ஓம் தத் ஸத்.

---

## புருஷார்த்தம்.

(117-ம் பக்கத்தொடர்ச்சி.)

### 4—வீடு.

வீடு என்னும் சொல் விடு என்னும் முதனிலை திரிந்த தொழிற் பெயராம். விடுதலை என்பது பொருள். மோக்ஷம் என்னும் பதமும் அப்பொருளது. அற்றேல் "எதினின்று விடுபடுதல்?" என்னும் வினா நிகழுமன்றே? இதற்குப்பலர் பலவாறு விடையிறுப்பர். பௌத்தர்: "உருவம் (பஞ்சபூதம்), வேதனை (சுகதுக்கவறிவு), குறிப்பு (ஞானேந்திரியங்களும் மனமும்), பாவனை (இருவினை), விஞ்ஞானம் (எண்ணம்) ஆகிய ஐந்தன் கூட்டத்தினின்று விடுபடுதல்" என்பர். யோக நூலார்: "அவித்தை (தன்னையறியாமை), அஸ்மிதை (உடம்பை நானெனல்), இராகம் (இச்சை), துவேஷம் (கோபம்), அபிநிவேசம் (பயம்) என்னும் ஐந்து துக்கங்களினின்று விடுபடுதல்" என்பர். வேதாந்திகள் "ஜனனமரண சம்சாரத்தினின்று விடுபடுதல். மாயை மாயாகாரிய திரிசிய உலகம் இவற்றினின்று விடுபடுதல். கர்த்திருத்துவ போக்திருத்துவ பிராந்தியினின்று விடுபடுதல்" எனப்பலகூறுவர். யார் என்ன கூறினும் "சர்வதுக்கங்களினின்றும் விடுபடுதல் வீடு" என்பது அவர்கள் தாற்பரியமாம். மனவிரிவால் துன்பமும் மனக்குவிவால் இன்பமும் உண்டாம். அறம் பொருள் இன்பம் இம்மூன்றையும் பற்றிநிற்றம் மனவிரிவின் மூலமாகத் துன்பசாதனமா மாதலின் "பரனை நினைத் தில்

மூன்றும் விட்டதே பேரின்பவீடு" என்றார் நமது ஞானத்தாயார். உயிர்களால் விரும்பப்படுகின்ற மாறாத வின்பம் திரிவர்க்கமாகிய அறம் பொருளின்பங்களி லின்றாம். அவ்வின்பம் அபவர்க்கமாகிய வீட்டின் கண்ணேயே யுளதாம். ஆதலின் புருஷார்த்தமென்பது வீடே. அற முதலிய மூன்றையும் புருஷார்த்தமென்பது ஔபசாரிகம் (உபசாரமாகச் சொல்லப்படுவது). மருந்துண்ணவிரும்பாத மண்ணுண்ணும் குழந்தைகளுக்கு வெல்லத்தில் மருந்தை மறைத்து வைத்தூட்டும் நற்றாய்போல வேதத்தாய்விஷயங்களிலுழலும் யாந்தருக்கு "அறம்பொருளின்பங்களைச் செய்" என்று போதித்து, அறத்தால் சித்தசுத்தியையும், பொருளால் இதுபொன்றும் பொருளாக இருக்கிறதே பொன்றாப்பொருளொன்றுண்டா என்னும் ஆராய்ச்சியையும், இன்பத்தால் இவ்வின்பம் சிற்றின்பமாயின் பேரின்பமான வீட்டையும் யாமடைதல் வேண்டாவோ என்னும் அவாவையும் உண்டாக்கிப் பிறகுதன்னையடைந்த அவர்களுக்கு வீட்டு நெறியைப் போதிப்பள்.

மோக்ஷசாதனம் ஞானமேயாமென்பது பல உபநிஷத் வாக்கியங்களாலும்,

ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு

என்னும் வள்ளுவர் குறளாலும்,

தன்னை யறியு மறிவு தனைப்பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு

என்னும் ஔவை குறளாலும் நன்குவிளங்கும். மோக்ஷ சாதனம் வேறு எதேனும் கூறப்படுமாயின் அது பரம்பரா சாதனமாம். ஞானமொன்றே நேர்சாதனமாம். இந்தஞானமும் இடைவிடா ஆராய்ச்சியால்தான் வரும். "நான்யார்? பந்தம் எது? வீடு எது? பந்தமோக்ஷ காரணங்களெவை?" என்றற்றொடக்கத்தனவாக உசாவுதல் ஆராய்ச்சியாம். சுத்தமான அலையாமனத்தைப் பெற்றவரே இவ்வாராய்ச்சி செய்தற் குரியர். மனத்தைச் சுத்தமாக்குதற் பொருட்டுக் கர்ம மார்க்கத்தையும், மனத்தை ஒருமுகப் படுத்துதற் பொருட்டு உபாசனாமார்க்கத்தையும் போதிக்கும் பொருட்டுதான் உலகில் உள்ள பல்கோடி சமயங்களும் தோன்றின. ஒவ்வொருமதமும் ஒவ்வொரு சர்வஞ்ஞான ஆசாரியராலேயே உண்டாக்கப்பட்டது. மதங்களெல்லாம் ஈசுவரசம்மதமானவையே.

கேட்போர் மனநிலைக்கேற்பச் சிற்சில வேறுபாடுகளை மதாசாரியர்கள் அமைத்தார்கள். ஆறனைத்தும் கடல்நோக்கிச்செல்வன போன்று சமய மனைத்தும் பிரஹ்ம பதமென்றும், பரந்தாமமென்றும், வீடென்றும், நிர்வாண நிலையென்றும் ஆன்றோரால் கூறப்படும் ஆநந்த நிலையையே நாடிச்சொல்லுகின்றன. ஆதலின், மோக்ஷ விருப்புடையோர் சாத்திய விஷயங்களைப்பற்றி வாதிடுவதொழிந்து சாதனவிஷயங்களை அவ்வம் மதத்திற்கூறியவாறு சிரத்தையுடன் அனுசரித்துக்கொண்டே ஆராய்ச்சி செய்வார்களாக. சுருதி குரு சுவானுபவங்கொண்டு வீட்டுநெறி ஆராய்ந்து அந்நெறி நிற்பதொழிந்து பிறமத குற்றங்கூறிக்கொண் டுழல்வோன் வீணனே. மனிதஜென்மமெடுத்தும் வீட்டுநெறியுணரா முயலாதவன் மூடன்; அவன் தற்கொலைசெய்து கொள்பவனோடொப்பன். "தன்னைத் தான் தேடாச் சதிகாரர் ஏன் பிறந்தார்" என்றார் சொரூபானந்தர்.

வீட்டை விரைந்தடைய விரும்புவோர் தீவிர வைராக்கிய முடையரா யிருப்பின் துறவிகளாகக் கடவர். மற்றையோர் "பாவிமந்த விராகத்திற் சன்னியாசங்களென்றும் பலித்திடாதே" என்னுங் கைவல்லிய நூலின் கட்டுரையைக் கருத்திலூன்றி மனைவாழ்க்கை யினின்றே அகத்துறவை அப்யசித்துககொண்டு விசாரணைபுரிக. சண்மத ஸ்தாபனாசாரியராகிய பகவான் சங்கரர் வேதாந்த சாஸ்திரவிசாரணைக் குரிய அதிகாரத்தன்மைகளை (qualification) ச் சொல்லிக்கொண்டேவந்து கடைசியாக:

பேசிய அடைவாய் யாவும்
  பெற்றிட வொண்ணா தேனும்
ஈசனல் லருளினாலே
  இசைவதாய் அருமையான
மாசிலா மநுடத் தன்மை
  மன்னிய முமுட்சுத் தன்மை
தேசிக ராசன் சேவைத்
  திறமையிம் மூன்றும் போதும்.

(விவேக சூடாமணி.)

என்றார். ஆதலின் பிராஹ்மணன் சூத்திரன், ஆண், பெண், துறவி துறவிலான் என்னும் வித்தியாசமின்றிச் சகலரும் அறிவுநூலாராய்தற் குரியரென்க. இனி மநுடத்தன்மை யாவது பழிபாவங்களுக் கேதுவான செயல்களைச்செய்ய மனம் நாணுதலாம். இது:

ஊனுடை யெச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர்ச் சிறப்பு.

என்னும் குறளால் உணரப்படும். முமுட்சுத் தன்மையாவது பொன்றும் பொருளிது பொன்றாப் பொருளிது என ஆராய்ந்தடைந்த அறிவால் இம்மை மறுமைகளில் போகசாதனமாகும் பொன்றும் பொருள்களிடத்து உண்டாம் நிராசையையும் அதனால் உண்டாகும் மனவடக்கம் இந்திரிய வடக்கம் முதலியவற்றையும் பெற்றவனது மனதில் நிகழ்வதாகிய "பொன்றாப்பொருளாகிய மோக்ஷத்தை நானடையவேண்டும்" என்னும் தீவிர இச்சையாம். குருசேவையாவது: தனது ஞானசாரியரைக் கடவுளாகவே பாவித்து அவர்க்குப் பணிவிடை புரிதலாம்.

சொரூபானந்தர் என்னும் பெரியார் தாமருளிய சொரூபசாரம் என்னும் நூலில்,

ஞானநூல் கற்றாலும் நற்றவம் பூண்டாலும்
மோன சமாதி முயன்றாலும் — தானாகி
எல்லாக் கவலையுமற் றின்புற் றிருப்பதுவே
சொல்லாரு முத்திச் சுகம்.

என்னும் வெண்பாவினால் வீட்டியல் விளக்கினார். விரிவஞ்சிச்சுருக்கியுரைத்தாம். அன்பர்கள் தமிழில் வெளிவந்துள்ள பல அறிவுநூல்களையும் ஆராய்ந்து ஆனந்தபதம் பெற்றினிது வாழ்க.

அன்பன்,

சா. கந்தசாமி முதலியார்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை,

---

## சிறுவரைச் சீர்திருத்தும் முறை.

நமது வாலிபரிடத்துக் காணப்பெறும் குற்றங்களின் காரணங்களை நாம் எளிதில் தேர்ந்தறிவதற்கில்லை. மனிதனது மனோவளர்ச்சியில் பல பிராயங்களுக்கேற்ப காணப்படும் மனப்பான்மை, விருப்பு வெறுப்

புக்கள் முதலிய அம்சங்களை விளக்கும் மனோதத்துவ சாஸ்திரம் சிறு பான்மையே அததாரப்பில் நமக்குப் பயன் படுகின்றது நமது வாலிப ரிடத்து நாம் நடந்து கொள்ளும் விதமே அவர்களது சுபாவஹீனங்களை யறிவதற்கேற்ற கருவியாயிருக்கின்றது. அது எங்ஙனமெனில், நாம் எவ்விதம் அவர்களைப் பாராட்டுகின்றோமோ அவ்விதமே அவர்கள் ஆகின்றார்கள். அவர்களைப் பற்றி நாம் சிந்திக்கும் சிந்தனைகள், சொல்லும் சொற்கள், அவர்களுக்காகப் பரிவுடன் கொள்ளும் விசார வியாகூலங்கள் ஆகிய இவைகளுக்கேற்பவே அவர்கள் உருப்படுகின்றார்கள். அவர்களைப்பற்றி நல்ல அபிப்பிராயங்கள் உலவினால் அவர்கள் மனத்தில் அவ்வபிப் பிராயங்கள் ஆழ்ந்து அவர்களைக் காலாந்தரத்தில் சீர்பெற்று விளங்கும் புருஷோத்தமர்களாக்குகின்றன. அவர்கள் காதிற் படும்படி அவரது குற்றங்களையும் அதிருப்திகரமான போக்குப் பாங்குகளையும் பேசுவோமேல் அக்குற்றங் குறைகளும் அதிருப்திகரமான போக்குப் பாங்குகளும் அவர்களை விட்டகலாது கல்லில் செதுக்கிய எழுத்துக்களைப் போல் அவர்பால் நிலை பெறுகின்றன. அவர்களிடஞ் சொல்லும் சொற்களை விட அவர்களைப்பற்றிச் சொல்லும் சொற்களே அவர்களை அதிகமாய்ப் பாதிக்கின்றன. விஷவண்டு புழுவைப் பன்முறை கொட்டித் தன்னின மாக்குவதுபோல், "மடையன் நீ" எனப் பன்முறையும் நாம் கடிந்துரைப்பின் அதைசெவியுறும் வாலிபன் தான் உண்மையில் மடையன் என எண்ணி நிசமான அறிவீனனாகின்றான். ஆகவே, நல்லாசிரியரும் நல்ல தாய் தந்தையரும், முறையே தமது மாணவரும் வாலிபரும் நல்லொழுக்க மெய்தி நலனுற வேண்டுமெனில், அவர்களிடம் வசீகர வார்த்தைகளின் வாயிலாக அவர்கள் நற்குண நற்பயிற்சிகள் கையாள்வதினால் நிகழும் மேம்பாட்டை யெடுத்தோதி அவர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் ஊட்டினால், காலக் கிரமத்தில் சகல குண சம்பன்னர்களாகி அறிவு நிரம்பி பெரும் புகழ்பெற்று நிலவுவர்.

ஏ. சௌரிராஜுலு நாயுடு, பி.ஏ., எல்.டி.

---

## மாதரும் குடும்பங்களும்.

நமது தேசத்தில் மாதர்களே குடும்ப நிர்வாகத்தில் தலைமை ஸ்தானம் வகிப்பவர்கள். குடும்ப நிர்வாகம் இலேசான காரியமல்ல; அளவில்லாத கஷ்ட நிஷ்டூரங்கள் அதில் உண்டு; எல்லாவற்றையும் பொறு

மை யோடும் அன்போடும் முகமலர்ச்சியோடும் சகித்துக்கொள்ளும் சக்தியுள்ளவர்களே குடும்ப நிர்வாகம்செய்ய முடியும்; அஃதில்லாதவர்களால் நடத்தப்படும் குடும்பங்கள் சீர்குலைந்து பாழடையும். இதனாலேயே அது 'குடும்ப பாரம்' என்றழைக்கப் படுகின்றது. ஆகையால் மாதர்கள் தங்கள் பொறுப்புக்களை நன்றாக அறிந்திருத்த லவசியமாம். இவ்வாறு அவர்கள் தங்கள் கடமைகளை யறிந்து குடும்பத்தைச் செவ்வையாக நடத்திவருவார்களானால் அதுவே போதுமானது; வேறு வகையில் அவர்கள் உத்தியோக சத்தியோகங்கள் செய்து பணம் சம்பாதிக்கவேண்டிய அவசியமில்லை.

'கால்படி யரிசி பொங்கடி உனக்கு மெனக்கும் பங்கடி' என்று கணவனும் மனைவியும் மாத்திரம் தனித்து வாழ்வது குடும்பமல்ல; பலபேர் கூடி வாழ்வதே குடும்பமாம். மனித சுபாவம் தனித்து வாழ்வதல்ல; சேர்ந்து வாழ்வதே. 'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை', சேர்ந்து வாழாமைக்குக் காரணம் ஒற்றுமை யின்மையே யல்லவா? தாய் தந்தையரிடத்தும், சகோதர சகோதரிகளிடத்தும், மாமன் மாமியரிடத்தும் ஒற்றுமையாய் வாழ வகையறியாதவர்கள், வேறு குடும்பத்தாரும் வேறு ஜாதியாரும் வேறு மதத்தாருமாகிய மற்றவர்களோடு எவ்வாறு ஒற்றுமைப்படமுடியும்? 'அறையிலாடிதான் அம்பலத்திலாடவேண்டும்' என்பதுபோல, அன்பு, ஒற்றுமை முதலியவற்றை முதல் முதலாகக் கற்றுக்கொள்ளுதற் குரிய இடம் குடும்பமே யாகும்.

குடும்பங்கள் ஒற்றுமையின்றி கலகப்பட்டுக் கொண்டிருப்பதற்குக் காரண கர்த்தர்களா யிருப்பவர்கள் மாதர்களே; அதிலும் மாமிகளும் மருமக்களுமே யாவர். இவர்கள் தங்கள் கடமைகளைத் தெரிந்துகொள்வதில்லை ஆகையால் அவற்றை அவர்களுக்கு அறிவிப்பது அத்தியாவசியமாகிறது.

முதல் முதலாக மாமியை எடுத்துக் கொள்வோம். மாமியே குடும்பத்திற்குத் தலைவி. இந்த மாமிதான் தன் மகனுக்கு விவாகம் செய்யவேண்டுமே யென்று படாத பாடுகள் பட்டும், தேடாத விடமெல்லாம் தேடியும், கேளாதவர்களை யெல்லாம் கேட்டும் மருமகளைச் சம்பாதித்தவள். 'ஊராரைப்போல-உலகத்தாரைப்போல-தன் மகனுக்கும் ஒரு அழகான பெண்ணைத்தேடி கல்யாணம் செய்து, அவர்களிருவரும் சதிபதிகளாகக் கூடிவாழ்வதை எப்போது கண்ணாரக் கண்டு களிப்போமோ' என்றும், 'தனக்கொரு மருமகளிருந்தால் உதவியாய் இருப்பாளே; கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று ஓடிவருவாளே' என்றும் ஏக்கங்கொண்டிருந்தவள். இவ்வளவு நல்லெண்ணத்தோடு கொண்டவள் ஏன் இம்சித்துக் கொடுமை செய்கிறாள்?

விவாகம் நிச்சயமான வுடனேயோ அல்லது முடிந்த வுடனேயோ அவளுக்கு மற்றொரு எண்ணம் தோன்றுகின்றது. தன் மகன் 'பெண்டாட்டியின் ஆசைவலையில் அகப்பட்டுக்கொண்டு அவள் சொற்படி நடக்கத்தலைப்பட்டு, தன்மேல் கொண்டிருக்கும் பிரியத்தையிழந்து விடுவானோ என்னவோ' என்னும் பயத்தை யடைகிறாள். அதனால் அவள்மேலும் அவள் தாய்வீட்டார்மேலும் தன் மகனுக்கு வெறுப்புண்டாக்க முயலுகிறாள்.

பெண்ணனவள் தன் தாய்வீட்டிலிருக்கையில் மாமியார்களைப் பலர் பலவிதமாகப் பழிப்பதைக் கேட்க நேர்டுகிறது ஆகையால் அப்பொழுதே மாமிகளைப் பற்றி வெறுப்படையத் தொடங்குகிறாள். அதோடு தனக்கு விவாகப் பேச்சு நடந்துகொண்டிருக்கும் பொழுது, வருவாரும் போவாரும் 'மாமியார் எப்படிப்பட்டவள்; நல்லவளா, கெட்டவளா?' என்று விசாரிக்க வாரம்பிக்கிறார்கள். இதனால் அப்பெண்ணின் வெறுப்பு பலப்படுகிறது. விவாக காலத்தில் மாமியாரைப் பற்றித் தன்னைச் சேர்ந்தவர்கள் தாறுமாறாகப் பேசுவதைக் கேட்கக் கேட்க எரியுங் கொள்ளியை எறத்தள்ளுவதுபோலாகிறது. அதனால் அவள் எப்படியாயினும் மாமியின் கொடுமைக்குள்ளாகாமலிருக்க விரும்புகிறாள். அதற்கு அவளுடைய சம்பந்தத்தை ஒழித்து விடுவதே வழி யென்று அவள் அறியாமலிருக்க முடியாது.

இவ்விதமான எண்ணத்தோடு வீட்டிற் புகுந்த மருமகள் மாமி கட்டளைகளுக் கிணங்காமல் ஏறுமாறாக நடக்கவும், சமயம் நேரும்போது கணவனைத் தன் வசப்படுத்திக் கொள்ளவும் தொடங்குகிறாள். 'கொண்டவன் பலமிருந்தால் குப்பையேறிச் சண்டைபோடலா' மல்லவா! அதன்மேல் மாமியின் கொடுமைகளும் அதிகரிக்கின்றன. இதன் முடிவு என்னாகும் என்பதை விஸ்தரிக்க வேண்டியதில்லை. இந்நிலைமையில் புருஷர்களின் கதி என்ன? அதோகதிதான். அதிலும் சற்று மானமுள்ளவர்களானால் வேறு நரகவேதனை வேண்டியதில்லை.

மாமியின் அதிகாரத்தை விளக்க ஒருகதை கூறுவதுண்டு. அது இது:—

ஒரு மாமி தன் குடும்பத்தைச் சேர்ந்த சர்வாதிகாரங்களையும் தானே மேற்கொண்டு வந்தாள். உப்பு மிளகாய் முதலாய் சகல சாமான்களும் அவள் பெட்டியில்தா னிருக்கும். வேளா வேளைக்கு அவளே

அளவாக எடுத்துக் கொடுத்தால் மருமகள் சமைக்கவேண்டும். எல்லோரும் சாப்பிட்டபின்பு மிகுதியிருந்தால்தான் அவளுக்கு.

ஒருநாள் அந்த மாமி கடைக்குப்போ யிருந்தாள். அச்சமயம் ஓர் பரதேசி அவ்வீட்டு வாயிலில் நின்று பிச்சை கேட்டான். மருமகள் அவனைப்பார்த்து 'ஐயா! போய்வாரும். வீட்டில் பெரியவர்கள் இல்லை; கடைக்குப்போ யிருக்கிறார்கள்' என்றாள். அவன் போய்விட்டான். யாரோ ஒருவன் தன் வீட்டிலிருந்து போவதைக் கடையிலிருந்து திரும்பி வந்துகொண்டிருந்த மாமிகண்டு அவனை யழைத்து 'அந்த வீட்டுக்குப் போனாயே, என்ன நடந்தது' என்று கேட்டாள். அவன் நடந்ததைச் சொன்னான். அவ்வளவுதான்; வந்துவிட்டது கோபம் மாமிக்கு. 'ஓய், அப்படியா சொன்னாள்! உண்மையாகவா?' என்று உறுத்திக்கேட்டாள். பரதேசி சந்தோஷங் கொண்டான், அப்படிபாவி பிச்சை யிடாதது இந்தப் புண்ணியவதிக்கு சகிக்கமுடியவில்லை என்று எண்ணிக்கொண்டே 'ஆமாம்மா அப்படித்தான் சொன்னார்கள்' என்றான். 'ஆனால் என்னோடு வா, சொல்கிறேன்' என்று அவனை அழைத்துக்கொண்டுபோய், மருமகளைக் கூப்பிட்டு 'பரதேசியாரே! இவள் நீ பிச்சைகேட்டபோது என்ன சொன்னாள்?, என்று மறுபடியும் கேட்கவே அவன் முன்சொன்னதைச் சொன்னான். மாமி அவளைக் கோபத்தோடு பார்த்து 'என்னடி! அப்படியா சொன்னாய்? என் வீட்டுக்கு வந்த பிச்சைக்காரனைப் 'போய்வா' என்று சொல்ல நீ யார்? அவ்வளவு அதிகாரம் வந்துவிட்டதா உனக்கு! யார் உனக்கு இந்த அதிகாரம் கொடுத்தவர் இடைப்பக்கட்டைக்குப் பட்டுக்குஞ்சம் கட்டினதுபோல. அவ்வளவு வாயா! ஆகட்டும் உன் வாயில் மண்ணை யள்ளிப்போடுகிறேன்' என்று சராமாரியாய்ப் பொழியலானாள். பரதேசிக்குப் பரமானந்தம். 'இனி நாம் வேறெங்கும் போய் அலைய வேண்டியதில்லை. இப்புண்ணியவதியே நம்மைச் சரிப்படுத்திவிடுவாள்' என மனோராஜ்யம் செய்துகொண்டு நிற்கிறான். அரைமணி நேரமாயிற்று; வாய் ஓயவில்லை. பிறகு, திரும்பினாள் மாமியார் சாமியார் பக்கம். திரும்பி அவனைப்பார்த்து 'ஓய், பண்டாரம்! சரிதான். அவள் தான் தெரியாமல் போகச்சொன்னால் நீயெப்படி போகலாம்? என் வீட்டிற்கு அவளா அதிகாரி? நானல்லவா அதிகாரி? நான் போகச்சொன்னாலல்லவோ நீ போகவேண்டும்! இதோ நான் சொல்கிறேன் 'போ' என்று: இப்பொழுது போ; போமையா; ஏன் நிற்கிறாய்?' என்று அதட்டிக் கூவினாள். பாவம், பரதேசியின் ஆகாயக்கோட்டை யிடிந்து விழ, மிக்க விசனத்தோடு திட்டிக்கொண்டே போய்விட்டான். பார்த்தீர்களா மாமியின் அதிகாரத்தை!

(தொடரும்.)

பூ. ஸ்ரீநிவாசன்,
தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

ஸ்ரீ

# தியானம்.

(104-ம் பக்கத் தொடர்ச்சி).

இஷ்ட தெய்வத்தைத் தியானித்தலால் வேண்டியது வேண்டிய வாறே சித்திக்கும் என்பதற்குத் துருவன் விஷ்ணுவைத் தியானித்து பலன் பெற்ற சரித்திரமே தக்க சான்றாகும்.

சுவாயம்பு மனுவின் புத்திரனான உத்தானபாதனுக்கு சுருசி சுநீதி என்னும் மனைவியர் இருவரிருந்தனர். அவருள் சுருசி உத்தானபாதனுக்கு மிகப்பிரியள். அவளுக்கு உத்தமன் என்னும் பிள்ளை பிறந்தான். மற்றொரு மனைவியாகிய சுநீதி கணவனுக்கு உகந்தவளா யிருக்கவில்லை. அவள் வயிற்றில் துருவன் என்னும் குமாரன் தோன்றி சகல சற்குணங்களும் பொருந்தினவனா யிருந்தான். ஒருநாள் அரியாசனத்திலிருக்கும் மன்னன் மடிமீது ஆபரணம் பல பூண்ட உத்தமன் அமர்ந்திருப்பதைப் பார்த்து தானுமப்படி இருக்கவேண்டு மென்றெண்ணித் துருவன் தந்தையருகிற் போனான். அப்போது சக்களத்தி மகனான அத்துருவனைப் பார்த்து 'நீ என் விருதாவாக எத்தனிக்கின்றாய்? சாம்ராஜ்ய லக்ஷ்மி நிவாசமான இச்சிங்காசனம் உனக்குத் துர்லபம். என் மகனே அதற் கேற்றவன் போ' இன்ற இழிவுரையை சுருசி சொன்னாள். அதைப் பொறாமல் கலங்கிய மனமுடையவனாய் அத்துருவன் சரேலெனத் தாய் வீடு சேர்ந்தான். கோபத்தாற் கண்சிவந்து உதடு துடிக்கவந்த தன் அருமை மகனை மடிமீதிருத்தி 'குழந்தையே! உன்னை வைதவர் எவர்? உனக்கபராதம் செய்து உன் தந்தைக்கு அவமதிப்பை விளைவித்தவர் யார்?, எனக் கேட்க, சுருசி அரசனருகில் தன்னைக் கடிந்துரைத்த வார்த்தைகளைச் சொன்னான். அதுகேட்டலும் அச்சுநீதி மனம் நொந்து சொல்லுவாள். 'அப்பனே! பாரியை யென்னும் பெயர்மாத்திரமுடைய பாக்கிய வீனையான என் வயிற்றிற் பிறந்த காரணத்தால் உனக்கு அவ்வாறு நேர்ந்தது. குழந்தாய்! அதைக்குறித்து வருத்தப்படாதே' என்று பலவாறு சொல்லியும், தன் மனத்திற்பதியாமல் 'ஐசுவர்ய கர்விதையான அவளாலே நிராகரிக்கப்பட்ட நான் சர்வோத்தமமான ஸ்தானத்தைத் தவத்தால் அடைய முயல்வேன். தாயே அனுமதிதா' எனலும் 'பால்மணமாறாத பசும் பிள்ளையாயிற்றே. அனாதையான என்னைத் தனியேவிட்டு ஏகுதல் தகுதியல்லவே' என்று தாய் சொல்ல, ஒருவாறு தெளிவித்துத் தாயினிடம் விடை பெற்று அதிசீக்கிரமாய் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டான்.

துருவன் ஊர்க்கருகிலுள்ள ஓர் உபவனத்தில் மான்தோல் மேலமர்ந்த மரீசி முதலிய மகர்ஷிகள் எழுவரைக் கண்டு அவரடிபணிந்து விநயத்துடன் வணங்கி 'முநிவர்களே! நான் உத்தானபாதனுக்குச் சுநீதி வயிற்றிற் பிறந்த பிள்ளை. என்பெயர் துருவன். எனக்கு மாற்றாந்தாய் சொல்லிய மாற்றந்தாளாமல் இங்குற்றேன். பூர்வகாலத்தேஒருவராலேயும் அனுபவிக்கப்படாத ஓர்உந்நதமான ஸ்தானத்தை வேண்டுகின்றேன் அதற்குபாயம் அடியேற்கு அருள வேண்டும், என்று சொன்னான். அவர்கள் க்ஷத்திரிய வீர்யத்திற்காக வியந்து மதலை மொழிக்கிரங்கி 'பாலகா! பக்தபராவசனும் பிரம்மாதிகளுக்கு அதீதனும், சர்வ வியாபகனுமான ஸ்ரீ விஷ்ணுவைக் குறித்துத் தியானம் செய்வையேல் அதை யடைவாய் ஐயமில்லை இந்திராதியர் அவனைத் தியானித்து அவனருளால் சுவர்க்க பதவியை எய்தினர்கள், என்று சொன்னார்கள். மேலும் பகிர் விஷய அபிலாஷைகளை நீக்கி மனத்தை நின்மலமாக்கி அந்நின்மல மனத்தை பகவதாகாரமாகச் செய்யும் உபாயத்தையும் அஷ்டாட்சர மந்திரத்தையும் உபதேசித்தார்கள் அம்மகரிஷிகள். பிறகு துருவன் மதுவனம் புகுந்து விசுவத்திற்கு ஆதியாய் விசுவாகாரனாய் விசுவவந்தியனான ஸ்ரீவிஷ்ணுவைத் தன் இருதய கமலத்தில் தியானிக்கத் தொடங்கினான். அக்கால் இந்திரன் தன்மாயையால் இடையூறுகள் பல செய்தும் சித்தம் சலிக்காமல் ததேகத்தியானம் செய்துகொண்டிருந்த அந்தத் துருவனுடைய சித்தத்தின்கண் சர்வ பூதங்களிலுமுள்ள ஸ்ரீ ஹரிபகவான் மிகப்பிரகாசமாகத் தோன்றினார். பிறகு பகவான் எதிர்தோன்றி பாகியவிஷயங்களைப் பற்றறுத்துச் சித்தத்தை என்பால் நிலையாக நிருத்தியதால் நான் மிக மகிழ்ந்தேன் இஷ்டமான வரத்தைக் கேள் என்று சொன்னார். அதுகேட்டு துருவன் கண்களைத்திறந்து தான் எவ்வுருவத்தோடு தன் னிதயத்தில் தியானம் செய்தானோ அவ்விதமாகவே எதிரில் சங்க சக்ரம் கதை பத்மம் சார்ங்கங்களாகிய பஞ்சாயுதங்களுடனேயும் கிரீடம் வனமாலை கௌஸ்துப பீதாம்பராதிகளுடனேயும் எழுந்தருளிய இறைவனைக் கண்டு சாஷ்டாங்கமாய் பூமியில் விழுந்து தண்டனிட்டுப் புளகாங்கிதனாய்ப் பயபத்திடயுனே தேவ தேவனான ஸ்ரீமந்நாராயணனைத் துதிசெய்ய நினைத்தும் வாய்வராமல் தியங்கும் அத்துருவனுடைய முகத்தில் சகல வித்யாமயமான தன்னுடைய திவ்ய சங்கத்தைப் பரிசித்தருளினார். தக்ஷணம் பலவாறு தோத்திரம் செய்யவே பகவான் சந்தோஷித்துக் காமியவிழைவுக்குத் தக்கபடி, சகல தாரா கிரக நட்சத்திரங்களுக்கும் ஆதாரமாய் சூர்ய சந்திர அங்காரக புத பிரகஸ்பதி சுக்கிர சநிகளுடைய ஸ்தானங்களுக்கும் விமானாரூடமாய் இன்றும் நிலவும் ஓர் மண்டலத்தை உண்டாக்கி அவன் பெயரால் வழங்க அருளினார். இங்ஙனம் பரமேசுவரனை சகாமத்தோடு தியானம் செய்தால் போகப்பிராப்தியும் நிஷ்காமமாகத் தியானம் செய்தால் மோக்ஷப் பிராப்

தியு முண்டாகும். சகளத்தையும் நிஷ்களத்தையும் குறிக்கும் வஸ்து வேறல்ல அது ஒன்றேயாகும். அது அதனுடைய ஆகிருத் விசேஷமே யன்றி வேறில்லை. அது, பொற்பணிதி போலவும் கம்மன்போலவுமாம். கடதிருஷ்டி சகளம் மண்திருஷ்டி நிஷ்களம். நிர்க்குண மென்பது இல் லவே இல்லை என வாதியர் சிலர் மயங்குவர். சத்வாதி குணங்களைக் கடந்ததே இங்கு நிர்க்கு மென்பதாம். (தொடரும்.)

க. அரங்கநாதப் பிள்ளை,
வேதாந்த தர்க்க போதகாசிரியர், சென்னை.

---

## உயர்ந்த செல்வம் (சிறுகதை.)

[இது கவி ரவீந்திர நாத் தாகூர் அவர்களால் எழுதப்பட்டு W. W. பியர்சன் அவர்களால் ஆங்கிலத்தில் 'ஹிடன் டிரஷர்' (Hidden Treasure) என்னும் தலைப்புடன் மொழி பெயர்க்கப்பட்டு, மாடர்ன் ரேவ்யூ 1921ஞு அக்டோபர் மாதத்திய சஞ்சிகையில் வெளிவந்துள்ளது].

சந்திரப் பிரகாச மின்மையால் அந்தகாரத்தினல் சூழப்பட்ட ஓரிரவு மிருத்யுஞ்சயன் தன் குலதெய்வமாகிய காளியின் முன் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவனும் பூஜையை முடித்தான்; பொழுது விடியவே காகங்களும் "கா, கா" வெனக்கூவின. கதவு மூடியிருக்கிறதா வென்று முன்னர் கவனித்துவிட்டு காளியை இன்னுமொருதரம் வணங்கி, காளி விக்ரகத்தின் அடிப்பாகத்தைச் சற்று நகர்த்தி அதன்கீழிருந்து ஒரு வலியமரப்பெட்டியை எடுத்து தனது பூணூலில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு சாவியால்அதைத்திறந்து உள்ளே பார்த்ததும் மனங்கலங்கித் திகைத்தான். பெட்டியைப் பலதரம் குலுக்கிப் பார்த்தான்; பூட்டு உடைக்கப்பட் டிருக்கவில்லை யாதலின் பெட்டி உடைத்து திறக்கப்பட்டிருக்கவில்லை. விக்ரகத்தைச் சுற்றி பத்துப் பன்னிரண்டு முறை தேடியும் ஒன்றும் அகப்பட்டிலது. இச்சிறு ஆலயம் மதிலால் சூழப்பட்ட மிருத்யுஞ்சயனது தோட்டத்தின் ஒரு மூலையிலிருந்தது. அதைச் சூழ்ந்து சில உயர்ந்த மரங்கள் நிழல்தந்து நின்றன. உள்ளே காளி விக்ரகத்தைத் தவிர வேறொன்றுமில்லை. அவ்வாலயத்திற்கு வாயிலும் ஒன்றுதான். மிருத்யுஞ்சயன் பயித்தியம் பிடித்தவன்போல் கதவைத் திறந்து போட்டுவிட்டு தோட்டம் முழுவதும் சுற்றிச் சுற்றி வீணே தேடித்திரிந்தான். இப்போது பொழுது நன்றாக விடிந்துவிட்டது. 'இனி அகப்படுவதேது' என்னும் எண்ணத்துடன் அவன் ஒருபடிமேல் உட்கார்ந்து தலையில் கை

வைத்துக்கொண்டு சிந்திக்கலானன். இரவெல்லாம் தூங்கவில்லை யாத லின் தூக்கம் வருவதுபோலிருந்தது.

"குழந்தாய்" என்ற சத்தங்கேட்டு எழுந்திட்டுப் பார்க்க தோட்ட வாயிலில் நீண்ட சடைமுடி தாங்கிய ஓர் சன்யாசி நிற்பதைக் கண்டனன். மிருத்யுஞ்சயன் அவரடியில் தாழ்ந்து வணங்கவும், அவர்: "குழந்தாய்! நீ வருந்துதல் வீண்" என்று சொல்லிக்கொண்டே தலையில் கைவைத்தார். மிருத்யுஞ்சயன் ஆச்சர்யத்தோடு "தாங்கள் பிறர்மனதை யுணர முடி யுமோ? நான் வருந்துவதாக தங்களுக்கு எப்படித்தெரியும்? நான் எனது வருத்தத்தை யாருக்கும் தெரிவித்தேனில்லை" என்றான்.

சன்யாசி: 'மைந்தா! நீ இழந்ததற்காக வருந்துவதற்குப் பதிலாக சந்தோஷப் படவேண்டும்.' என்றார். மிருத்யுஞ்சயன் அவர்காலை இறுகப் பிடித்துக்கொண்டு 'ஆயின், உமக்கு எல்லாம் தெரியும். அது எப்படிப் போய்விட்டது; எங்கே எனக்குத் திரும்பக்கிடைக்கும்; சொல்லுங்கள்' என வேண்டினன்.

சன்யாசி:—நீ கஷ்டங்களை அனுபவிக்க வேண்டுமென்று நான் விரும்பின் உனக்கு அதைச் சொல்வேன். உன்மேல் இரக்கங்கொண்டு தேவி எடுத்துக்கொண்டதைப்பற்றி நீ வருந்துதலாகாது' என பதிலளித் தார்.

மிருத்யுஞ்சயன் திருப்தி யடையாறாய் அவரை மகிழ்விக்கும் பொருட்டு அன்று முழுதும் அவருக்குப் பலவகையான தொண்டுகளைச் செய்து கழித்தனன். ஆனல் மறுநாள் காலை அவன் அவருக்காகத் தனது பசுவைக்கறந்து ஒரு கிண்ணம் பால் கொண்டுவந்தபோது அவர் அங்கில்லை.

## II.

மிருத்யுஞ்சயன் சிறுகுழந்தையாயிருந்தபோது அவன் பாட்டனர் ஹரிஹரர் என்பவர் ஒருநாள் இதே கோயிற்படியின்மேல் உட்கார்ந்து உக்கா பிடித்துக்கொண்டிருந்தார். அப்போது தோட்டத்துள் ஒரு சன் யாசி வந்து அவருக்கு வந்தனம் செய்ய, ஹரிஹரர் அவரைத் தமதில்லத் திற் கழைத்தேகி அவருக்கு அநேகநாள் உயர்ந்த விருந்து நடத்தி வந்த னர். சன்யாசி போகுந்தருணத்தில் ஹரிஹரரைப் பார்த்து 'மைந்த! நீ எழை அல்லவா?' என்றார். ஹரிஹரர் அதற்குப் பதிலாக 'அப்பனே!

உண்மையில் நான் ஏழை. என் நிலைமை என்னவென்பதைச் சற்றே கேளுங்கள். ஒருகாலத்தில் நாங்கள் இக்கிராமத்தில் உயர்ந்த செல்வவீந்தர்களா யிருந்தோம்; ஆனால் இப்போது நாங்கள் வெளியே தலைகாட்ட முடியாத அவ்வளவு கஷ்டத்தை அனுபவிக்கிறோம். நாங்கள் திரும்பவும் எவ்வாறு செல்வத்தை யடையக்கூடும் என்பதை எனக்குச் சொல்ல வேண்டுகிறேன்' என்றார்.

சன்யாசி:—'அருமை மைந்தா! தற்காலத்திலிருக்கும் நிலைமையோடு நீ ஏன் திருப்தி யடையலாகாது? செல்வவந்தனாக முயற்சிப்பதில் யாது பயன்?' என்றார். (தொடரும்.)

சா. கந்தசாமி முதலியார்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை.

---

## பழையது.

பழையது சாப்பிடுவது மிகவும் நல்லது. அந்தப் பழக்கத்தைக் கைக்கொண்டிருந்த நமது முன்னோர்கள் நோயின்றி திடகாத்திரராய்ச் சுகமுடன் நெடுங்காலம் உயிர்வாழ்ந்து வந்தார்கள். இப்போதும் கிராமங்களில் அவ்வா றிருப்பதைக் காணலாம். இரவில் ஆறின அன்னத்தில் நன்றாகக் காய்ந்து ஆறின ஜலத்தை ஊற்றி வைக்கவேண்டும். இதுவே பழையது வைக்கும் முறை. அந்தத் தண்ணீர்தான் நிசித்தண்ணீர் என்னப்படுவது. அதைக் காலையில் சாப்பிட்டு வந்தால் மிகவும் நல்லதென்று நம் நாட்டு வைத்தியர்கள் நாளைக்கும் சொல்வார்கள். இந்தப் பழக்கம் மாறி நமது தேசத்திற்கும் தேகத்திற்கும் சிறிதும் பொருத்தமில்லாத புதியதொன்றை காலையாகாரமாக உபயோகிக்கத் தொடங்கியதுதான் பெரிய ஆபத்திற் கிடமாயிற்று. அது கிடக்கட்டும். நான் இப்பொழுது சொல்லவந்தது இந்தப் பழையதைப் பற்றி யல்ல. இது கொள்ளத்தக்க பழையது; இப்போது சொல்லப் போவது தள்ளத்தக்க பழையது.

ஓர் ஊரில் ஒரு பெரிய பிரபு இருந்தார். அவருக்கு நெல் முதலிய தானியங்கள் விளையும் நிலங்கள் அளவற்றிருந்தன. நகைகளின் பேரிலும் நிலங்கள்பேரிலும் அதிக பணம் வட்டிக்குக் கொடுத்திருந்தமையால் கைச் செலவிற்குக் குறைவில்லை. இந்த சொத்து முழுவதும் அவருடைய

பெரியோர்கள் தேடிவைத்தவை. அதாவது பிதிரார்ஜிதம். அதைக் கொண்டு அவர் சுகமாகக் காலங்கழித்து வந்தார். அவருக்குக் கலியாண மாகி இரண்டு வருஷங்களாயின.

அந்தப் பிரபு ஒருநாள் பகல் சாப்பாடு முடித்து ஊஞ்சலிலமர்ந்து ஊசலாடிக்கொண்டே தாம்பூலந் தரித்துக்கொண்டிருந்தார். அப்போது அவரது மனைவி மாணிக்கம்மாள் போஜனம் முடித்துக் கையலம்ப வந்தாள். வைத்தியநாத முதலியார் என்னும் பெயருடைய அப்பிரபு அவளை நோக்கிப் புன்சிரிப்போடு 'இன்று சமையல் எப்படி? நம் சமையற்கார சாம்பசிவன் வெகு கெட்டிக்காரன். மைசூர்ரசம் எவ்வளவு நேர்த்தியா யிருந்தது பார்த்தையா!' என்றார். அதற்கு அந்தம்மாள் 'என்னமோ யார் கண்டார்! நான் பழையது சாப்பிட்டேன்; எனக்கொரு நேர்த்தியும் தெரியாது' என்று சொல்லிக்கொண்டே போய்விட்டாள். இரண்டொரு நாட்கள் சென்ற பின்பு மறுபடியும் அப்படியே கேட்டார். மனைவியும் முன்சொன்னபடியே பதில் சொன்னாள். அவரும் உண்மைதானென்று பேசாம லிருந்துவிட்டார். மற்றொருநாள் அவள் சாப்பிட்டுக்கொண் டிருக்கும்பொழுது தற்செயலாய் அப்பிரபு அங்குச் செல்ல நேர்ந்தது. 'இப்பொழுது புதியதுதானே சாப்பிடுகிறாய். தினந்தோறும் பழையதே சாப்பிட்டால் உடம்பிற்காமோ' என்று அவர் கேட்க, 'இல்லை யில்லை பழையதுதான்' என்றாள் மாணிக்கம்மாள். அவள் சாப்பிட்டுக் கொண்டிருந்தது புதியதே யென்றறிந்த அப்பிரபு ஆச்சரியத்துடன் 'என்ன மாணிக்கம்! என்னை ஏமாற்றிக்கொண் டிருக்கிறாய். சகல பதார்த்தங்களுடன் புதியது சாப்பிட்டுக்கொண்டே பழைய தென்கிறாயே!' என்று கேட்டார். அதற்கு அவள் 'சற்றுப் பொறுங்கள் நான் சாப்பிட்டு வந்து சொல்கிறேன்' என்று சொல்லிவிட்டுச் சாப்பாடு முடிந்ததும் அவரை ஓரிடத்தில் உட்காரச் செய்து, தான் பக்கத்தில் நின்றுகொண்டு 'நீங்கள் நினைக்கிறபடி நான் சாப்பிடுவது புதியதுதான். ஆனால் நான் நினைக்கிறபடி அது புதியதல்ல; பழையதே. ஏனென்றால் நான் சாப்பிடுவது உங்கள் சம்பாத்தியமல்ல அப்படியிருக்க, அது எப்படி புதியதாகும். ஒவ்வொருவரும் தாங்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்துச் சாப்பிடுவதே சரியான சாப்பாடாகும். முன்னோர் தேடி வைத்த சொத்திருந்தால் இருக்கட்டும் வேண்டா மென்ன வில்லை. தங்கள் சாப்பாட்டிற்குத் தேவையானதை மட்டுமாவது தாங்களாகவே சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அந்த வருமானம் சொற்பமா யிருந்தாலும் அந்த உணவு கூழாயிருந்தாலும் அக்கறையில்லை. பிதிரார்ஜிதத்தைக் கொண்டு அறுசுவை யுண்டி உண்பவர்களைக் காட்டிலும் தங்கள் உழைப்பினால் கிடைக்கும் உப்பில்லாக் கூழை யுண்பவர்களே உயர்ந்தோராவர். முற்காலத்தில் அநேக அரசர்

களும் தொய்பி தைத்து விற்றும், புத்தகங்கள் எழுதி விற்றும் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு சாப்பிட்டு வந்தார்க ளென்று தேச சரித்திரங் களில் நான் படித்திருக்கிறேன். ஆகையால் உங்கள் சம்பாத்திய மல்லாத சாப்பாடு எனக்குப் புதியதாகத் தோன்றவில்லை. அதனுல்தான் நான் அவ்வாறு கூறினேன். குற்றமிருந்தால் மன்னிக்கவும்' என்று கூறி முடித் தாள். பிரபுவிற்கு வெட்கம் வந்துவிட்டது. அதுமுதல் அவர் வேலை செய்யத்தொடங்கினுர். சுயார்ஜிதத்தைக் கொண்டும் பிதுரார்ஜிதத்தைக் கொண்டும் இருவரும் சுகமாக வசித்துவந்தார்கள்.

"போனக மென்பது தானுழந் துண்டல்".

தாளாளன்.

---

## வேதாந்த சாத்திர விசார சங்கிரக வினவிடை இராம கிருஷ்ண சம்பாஷணை.

(112-ம் பக்கத் தொடர்ச்சி).

இரா:—இவ்வாறு உபாசனை செய்பவன் சித்தம் எவ்வாறிருக்கும்?

கிரு:—விஷயங்களிற் சென்றலைவ தொழிந்து, தான் விரும்பித் தியானிக்கும் தெய்வத்தின் வடிவமாய்ச் சாந்தமாயிருக்கும்.

இரா:—உபாசனை முற்றுப்பெற்று வருகின்ற தென்பதற்கு அடையாளம் என்ன?

கிரு:—சொப்பனத்திலும் உபாசனை செய்து வருதலேயாம்.

இரா:—அதனை விளக்க வேண்டும்.

கிரு:—(1) மனம், புத்தி, சித்தம், அகங்கார மென்னும் அந்தக்கரண சதுஷ்டயமும், சுரோத்திரம்-துவக்கு-சட்சு-சிங்குவை-கிராணம் என்னும் ஞானேந்திரிய பஞ்சகமும், வாக்கு-பாதம்-பாணி பாயுரு-உபஸ்தம் என்னும் கர்மேந்திரிய பஞ்சகமும் தத்தம்

வியாபாரங்களைச் செய்தற்குரியகாலம் சாக்கிராவஸ்தையாம்; (2) இச் சாக்கிராவஸ்தையின் வாசனையால் தோன்றிய விஷயங்களோடு அந்தக்கரணங்கள் கூடித் தத்தம் வியாபாரங்களைச் செய்தற் குரியகாலம் சொப்பனாவஸ்தையாம். அந்தக்கரண சதுஷ்டயம், ஞானேந்திரிய பஞ்சகம், கர்மேந்திரிய பஞ்சக மென்பன வனைத்தும் செய்யும் வியாபார மனைத்தும் பிறழ் வின்றிப் பகவானை நோக்கி யிருக்க இருப்பவன்றான் சொப்ப னத்திலும் உபாசனை செய்துவருதற் குரியவனாவான். சாக்கி ராவஸ்தையில் நாம் அழுத்தமாகக் கருதும் பொருள் நமக்குச் சொப்பனாவஸ்தையில் தோன்றுதல் பிரசித்த மல்லவா? அத னால் சாக்கிராவஸ்தையில் அழுத்தமாக உபாசனை செய்பவன் சொப்பனாவஸ்தையில் அதனைச் செய்யாது வேறெதனைச் செய்வான? இதனை நீ பெரிதுங் கவனித்தல்வேண்டும்.

இரா:—சொப்பனத்திலும் உபாசனை செய்யும் பாக்கியத்தைப் பெற்றவன் எவ்வாறிருப்பன்?

கிரு:—(1) சாதுக்களை நிந்தித்தல், (2) அசாதுகளிடத்துப் பகவானது மகிமையைக் கூறுதல், (3) தெய்வ மிகழல், (4) வேதவாக்கியங்களில் விசுவாச மின்மை, (5) சாஸ்திரவாக்கியங்களில் சிரத்தை யின்மை, (6) குருவாக்கியங்களில் நம்பிக்கை யின்மை (7) ஈசுவர நாம மகாத்மியத்தில் விபரீத புத்தி, (8) ஈசுவர நாம உச்சாரணம் பாவமனைத்தையும் கெடுப்பதா மென்னும் புத்தியால் பாவ கருமங்களைச் செய்தல், (9) ஈசுவர நாம உச்சாரணம் பெரும் புண்ணியத்தை யுண்டாக்குமென்னும் புத்தியால் புண்ணிய கருமங்களைச் செய்யாதொழிதல், (10) ஈசுவர நாமம் யானை, குதிரை முதலிய பெயர்போல்வதா மென்றெண்ணி அதனை யிகழுதல் என்னும் இப்பத்துக் குற்றமு மின்றி,

(1) பகவானது அளவிறந்த கலியாண குணங்களைப் பிறர் சொல்லக்கேட்டு மகிழ்தல், (2) பகவானது குணங்களைப் புகழ்ந்து சொல்லுதல், (3) பகவானது நாமங்களுள் யாதாவ தொன்றனை எப்போதுஞ் சிந்தித்தல், (4) பகவானது திருவடிகளை வணங்குதல், (5) பகவானைப் பூசித்தல், (6) பகவானைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தல், (7) எப்போதும் தம்மைப் பகவானது அடிமையாகப் பாவித்தல், (8) பகவானிடத்துச் சிநே

கம் பாராட்டி யிருத்தல், (9) உடல்-பொருள்-ஆவி மூன்றை யும் பகவானுக்குத் தத்தம் பண்ணி விடுதல் என்னும் இவ் வொன்பது குணமும் தமக்குச் சொந்தமாக விருக்க இருப்பர்.

இரா:—உபாசனை நிலைபெற்று வருதற்குரிய சாதனங்க ளெவை?

கிரு:—அவை: (1) அஹிம்சை, (2) இந்திரிய நிக்கிரகம், (3) ஜீவகாருண் யம், (4) பொறை, (5) தபசு, (6) பகவானை விடாது தியானஞ் செய்ய முயலுதல், (7) சாந்தி, (8) பொய்யாமை என்பனவாம். இவ்வெட்டில் ஒன்றுங் குறைதல் கூடாது; குறையின் உபா சனை முற்றுப் பெறுவ தாகாது.

இரா:—முற்றுப்பெற்ற உபாசனைக்குப் பெயர் யாது? முற்றுப் பெறாத உபாசனைக்குப் பெயர் யாது?

கிரு:—முற்றுப்பெற்ற வுபாசனைக்குப் பெயர் கிருதோபாசனையாம்; முற்றுப் பெறாத வுபாசனைக்குப் பெயர் அகிருதோபாசனை யாம்.

இரா:—கிருதோபாசகர் எவ்வா றிருப்பர்?

கிரு:—மேற்கூறிய பத்துக் குற்றமு மின்றி ஒன்பது குணத்தோ டிருப்ப தன்றி, வேறு எட்டுக் குணமுடையவரா யிருப்பர்.

இரா:—அவை யெவை?

கிரு:—அவை: (1) பகவானது பத்தரிடத்துப் பிரியங் கொள்ளுதல், (2) பகவானைப் பூசிக்கின்றவரைக் கண்டவிடத்து மிகழ்ச்சி யுறு தல், (3) பிறரே வுதலின்றிப் பகவானைப் பூசித்தல், (4) இடம்ப மின்றிப் பகவானைப் பூசித்தல், (5) பகவானது திவ்விய சரித் திரங்களைப் பிறர் சொல்லக்கேட்க முயலுதல், (5) பகவத்பத்தி விசேடத்தால் பரவசமாய் விடுதல், (7) சர்வத்தையும் பகவா னாகக் காண்டல், (8) எப்போதும் சித்தம் சோர்வின்றிப் பக வானை நோக்க விருத்தல் என்பனவாம்.

இரா:—அகிருதோபாசகர் எவ்வா றிருப்பர்?

கிரு:—மேற்கூறிய குற்றங்களில் சிலவற்றை யுடையவராயும், குணங்களில் சிலவற்றை மேற்கொள்ளாதவராயு மிருப்பர்.

இரா:—இவர் எப்போது கிருதோபாசகராவர்?

கிரு:—உலகம் துயர்வடிவும், பிறவியினும் பெரிதாயபிணியின் றென்னு முணர்ச்சி செவ்வையாக வுண்டாகும்போது கிருதோபாசகராகும் பாக்கியத்தைப் பெறுதற் குரியவராவர்.

இரா:—கிருதோபாசகர் தமது உபாசனை முற்றுப்பெற்ற காலத்தி லெவ்வாறிருப்பர்?

கிரு:—மானம்-அவமான மென்பதின்றி, சர்வத்தையும் பகவத் சொருபமாக மாறுதெண்ணி மகிழ்ந்து, ஒருவாறு சர்வத்திலும் தம்மையும் தம்மில் சர்வத்தையும் காணும் பாக்கிய முடையவராயிருப்பர்.

இரா:—சரியை, கிரியை, யோகம் என்பன கருமோபாசனைகளி லடங்காவோ?

கிரு:—சரியையும் கிரியையும் கருமத்திலும், யோகம் உபாசனையிலும் அடங்கும்.

இரா:—பயன் நோக்காது கருமத்தைச் செய்து, அது வாயிலாக உபாசனை செய்பவரே ஞானதிகாரியாவரென்பது இது காறும் கூறியவாற்றால் பெறப்பட்டது. இதற்குப் பிரமாண முண்டோ?

கிரு:—உண்டு, அது:

"யோகியர்க்கே ஞான மொழுங்காம் பேரன்பான தாகியரும் யோக முன்னே சார்ந்தோர் பராபரமே" என்பதாம். (வரும்.)

(சென்னை, இந்து தியலாஜிகல் ஹை ஸ்கூல் தமிழ்ப் பண்டிதரும்,
வேதாந்த தர்க்க போதகாசிரியருமாகிய)

கோ. வடிவேல் செட்டியார்.

## ஈப் பகை.

[யங் சிடிசன் (Young Citizen) பத்திரிகையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.]

இப்போது சிலகாலமாகத்தான் ஈக்களா லுண்டாகும் கெடுதல்களைப் பற்றி நாம் ஆராய்ந்து வருகின்றோம். நாம் ஒரு ஈயை (சிறு பொருளைப் பெரிதாகக் காட்டும்) அணுதரிசனி (microscope) என்னும் கருவிகொண்டு காண்போமாயின், அதனுடைய கால்கள் சிலுப்பிக்கொண்டிருக்கும் மயிர்களால் மூடப் பட்டிருப்பதையும், அம் மயிர்களில் நோய்களுக்குக் காரணமாய் அணுவள வினவா யிருக்கும் புழுக்களும் அழுக்கும் ஒட்டிக்கொண் டிருப்பதையும், பிசுபிசுப்பான அதன் பாதங்கள் அழுக்குகளை கிரகிக்கக் கூடியனவா யிருப்பதையும், யானைத் துதிக்கைபோன்ற மூக்கினுல் அது மலததை உறிஞ்சி நாம் உண்ணும் உணவில் அம் மலத்தைக் கக்குவதையும் நாம் காணலாம்.

நாம் அதன் பழக்கங்களையும் வாழ்க்கையையும் ஆராயின், அது நோய்களைப் பரவச் செய்யும் கருவிகளில் பெருவழக்கானது என்றறிவோம். ஒரு ஈ 500 முதல் 60,00,000 வரை நுண்ணியவாய நோய்ப் புழுக்களை குப்பை தொட்டியி லிருந்து உண்கலத்தில் கொண்டுவந்து சேர்க்கும். நானூறு வீட்டு ஈக்களை ஒருசமயத்தில் மொத்தமாய் பிடித்து ஆராய்ந்தபோது, ஈ ஒன்றுக்குச் சராசரி 10,00,000 நுண்ணிய நோய்ப் புழுக்கள் இருந்தன. ஒரு ஜாடிப் பாலை நுண்ணிய நோய்ப் புழுக்கள் எல்லாம் சாகும்படி சாஸ்திரீய முறையில் சுத்தமாக்கிப் பிறகு அதில் ஒரு ஈயைப் பிடித்துப் போட்டு சிலமணிநேரம் வைத்திருந்து பிறகு ஆராய்ந்ததில் ஒன்று அல்லது பல நோய்களை உண்டாக்கும் நுண்ணிய நோய்ப் புழுக்கள் பலவற்றுல் நிரப்பப் பட்டிருந்ததாகத் தெரியவந்தது. சில வருஷங்களுக்கு முன்னர் நாம் "ஈயைப் போல் கெடுதலின்றிய" என்னும் சொற்றொடரை அறியாமையால் வழங்கி வந்தோம். இன்று வயித்தியர் "பாலி லிருக்கும் ஓரீ குடும்பத்தில் ஒருவரைக் கொல்லும்" என்கின்றூர்.

ஈக்கள் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும். ஒரு பெண் ணீ தன்னற்ப வாழ்நாளில் நான்கு திரள் முட்டையிடும். திரள் ஒன்றுக்கு 150 முட்டையிருக்கும். இங்ஙனம் ஈத்தலைமுறை மூன்றில் ஒரே ஒரு ஈ 1,00,00,000 ஈக்களுக் கதிகமாகப் பல்கிப் பெருகிவிடும்.

சா. கந்தசாமி முதலியார்,

தமிழ்ப்பண்டிதர், சென்னை.

# அகத்திய இலக்கண வினாவிடை.

(இலக்கண மானது பிழையில்லாமல் பேசுவதற்கும் எழுதுவ தற்கும் கருவியாயுள்ளது. ஆகையால் இலக்கணம் படியாதவர்கள் பிழை யறப்பேசவும் எழுதவும் அறியாதவராவர். ஆகவே, அத்தகையோர் கல்வி யாளரின் தொகையில்வைத் தெண்ணப்படார். நம் நாட்டில் தமிழ்க்கல்வி கற்றவர்களெனக் கருதப்படுவோரில் மிகப் பலர் இலக்கண மறியாதவர் களே. வியாபாரிகள் முதலானவர்கள் தங்களுக்கு இலக்கணம் அவசிய மில்லை யென்று புறக்கணிக்கின்றனர். இக்கொள்கை சரியானதல்ல. அது கஷ்டமாயிருக்கிறதென்று சிலர் கருதுகின்றனர். இது கருதியே ஆசிரியர் ஸ்ரீ மாங் கோ. வடிவேல் செட்டியாரவர்கள் மிக்க அருளுடன் எளிய நடையில் வினாவிடையாக இலக்கணத்தை எழுத ஆரம்பித்திருக் கின்றார்கள். அவர்களுக்குத் தமிழுலகம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றது.

இதனை ஒவ்வொருவரும் சற்று அக்கறையுடன் வாசித்தால் இலக்கணத்தில் தேர்ச்சி பெறுவரென்பது திண்ணம். ஆகையால் இதைத் தமிழ்மொழி யறிந்த ஒவ்வொருவரும் நிதானமாக வாசித்து மனத்தி லிருத்துதல் அவசியமாகும்.)

பத்திரிகாசிரியர்.

## எழுத்திலக்கணம்.

வினா:—எழுத்து எத்தனை வகையாம்?

விடை:—முதல் சார்பு என இரு வகையாம்.

வினா:—முதலெழுத்து எத்தனை வகையாம்?

விடை:—உயிரெழுத்து, மெய்யெழுத்து என இரு வகையாம்.

வினா:—உயிரெழுத்து எத்தனை வகையாம்?

விடை:—நான்கு வகையாம்.

வினா:—மெய்யெழுத்து எத்தனை வகையாம்?

விடை:—நான்கு வகையாம்.

வினா:—முதலெழுத்து எத்தனை யாம்?

விடை:—உயிர் 12; மெய் 18; ஆய்தம் 1; என முப்பத் தொன்றாம்.

வினா:—முதலெழுத்தின் பெயர்களெவை யாம்?

விடை:—அடி, தலை, தாள், ஆதி என்பனவாம்.

வினா:—12 உயிரெழுத்துக்களெவை யாம்?

விடை:—அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பனவாம்.

வினா:—உயிரெழுத்தின் பெயர்களெவையாம்?

விடை:—அச்சு, ஆவி, சுரம், பூதம் என்பனவாம்.

வினா:—உயிரெழுத்து எத்தனை வகையாம்?

விடை:—குறில், நெடில், சுட்டு, வினா என நான்கு வகையாம்.

வினா:—குற்றெழுத்து எத்தனையாம்?

விடை:—அ, இ, உ, எ, ஒ என ஐந்தாம்.

வினா:—குற்றெழுத்தின் பெயர்களெவையாம்?

விடை:—குறில், குறுமை, இரச்சுவம் என்பனவாம்.

வினா:—நெட்டெழுத்து எத்தனையாம்?

விடை:—ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என ஏழாம்.

வினா:—நெட்டெழுத்தின் பெயர்களெவையாம்?

விடை:—நெடில், நெடுமை, தீர்க்கம் என்பனவாம்.

வினா:—சுட்டெழுத்து எத்தனையாம்?

விடை:—அ, இ, உ என மூன்றும்.

(இவை சுட்டை யுணர்த்து மிடத்தன்றி, ஏனைய விடத்துச் சுட்டெழுத் தன்றாம்.)

வினா:—சுட்டெழுத்தின் பெயர்களெவையாம்?

விடை:—சுட்டல், குறித்தல், காட்டல் என்பனவாம்.

வினா:—சுட்டு எத்தனையாம்?

விடை:—அகச்சுட்டு, புறச்சுட்டு, அண்மைச் சுட்டு, சேய்மைச் சுட்டு, பொதுமைச் சுட்டு என ஐந்தாம்.

(1) மொழி யகத்து வரும் சுட்டு அகச்சுட்டாம். இதற்கு உதாரணம்:—அவன்-அது, இவன்-இது, உவன்-உது என்றற் றொடக்கத் தனவாம்.

(2) மொழிப் புறத்து வரும் சுட்டு புறச்சுட்டாம். இதற்கு உதாரணம்:—அம்-மாணிக்கம், இப்புலி, உவ்விடம் என்றற்றொடக்கத் தனவாம்.

(3) அண்மைச் சுட்டிற்கு உதாரணம்:—இவன், இது, இம் மாணிக்கம், இப்புலி என்றற் றொடக்கத் தனவாம். அண்மை-சமீபமாம்.

(4) சேய்மைச் சுட்டிற்கு உதாரணம்:—அவன், அது, அம்மாணிக்கம், அப்புலி என்றற் றொடக்கத் தனவாம். சேய்மை-தூரமாம்.

(5) பொதுமைச் சுட்டிற்கு உதாரணம்:—உவன், உவ்விடம் என்றற்றொடக்கத் தனவாம். பொதுமை-அண்மைக்கும் சேய்மைக்கும் மத்தியாம்.

வினா:—வினா வெழுத்து எத்தனையாம்?

விடை:—எ, ஏ, ஆ, ஓ, யா என ஐந்தாம்.

(இவை வினாவை யுணர்த்து மிடத்தன்றி ஏனைய விடத்து வினா வெழுத்தன்றாம்.)

வினா:—வினா வெழுத்தின் பெயர்க ளெவையாம்?

விடை:—வினாவல், கடாவல், கேள்வி, உசாவல் என்பனவாம்.

வினா:—வினா எத்தனையாம்?

விடை:—அகவினா, புறவினா என இரண்டாம்.

(1) மொழி யகத்து வரும் வினா அகவினாவாம். இதற்கு உதாரணம்: எவன், எது, யாவன், யாது, ஏவன் என்றற் றொடக்கத்தனவாம்.

(2) மொழிப் புறத்து வரும் வினா புறவினாவாம். இதற்கு உதாரணம்:—தங்கமா, தங்கமே, தங்கமோ என்றற் றொடக்கத் தனவாம்.

வினா:—வினா வெழுத்து ஐந்தனுள் மொழி யகத்து வருவன எவையாம்?

விடை.—எ, யா என்பனவாம்.

வினா:—மொழிப் புறத்து வருவன எவையாம்?

விடை:—ஆ, ஓ என்பனவாம்.

வினா:—மொழி யகத்தும் புறத்தும் வருவது எதுவாம்?

விடை:—ஏ ஆம்.

வினா:—யா வினா எவ்வா றெவ்வாறு வருவதாம்?

விடை:—"யா சுறியன" என அஃறிணைப் பன்மைக்கும் வருவதாம்; விகுதி பெற்று யாவன், யாவள், யாவர், யாது என்றற் றொடக்கத்தனவாய் இரு திணை ஐம் பாலிலும் வருவதாம்.

வினா:—வினாவிற்கு விடை யாதாம்?

விடை:—சுட்டாம். இதற்கு உதாரணம்:—"எவன் வந்தான்" என்னுமிடத்து "இவன் வந்தான்" என்பதாம். யாவினா "யா குறியன என எழுவாயாய்த் தனித்தும் வருவதாம். ஏனைய அங்ஙனம் வருவனவன்றாம். (வரும்.)

(இலக்கண இலக்கிய வேதாந்த தர்க்க போதகாசிரியர்)
கோ. வடிவேல் செட்டியார்,
சென்னை.

---

## பெட்டிமனிதன்.

(127-ம் பக்கத் தொடர்ச்சி).

கடிதத்தில் எழுதி யிருப்பது என்ன வென்று அறிய அங்குள்ளோரனைவரும் மிக்க அவாவுடன் ஒருவர்மே லொருவர் வீழ்ந்து நெருங்கினர். கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தவர் என்ன வாசிக்கிறார் என்பதை நீங்களும் வாசியுங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| கடைசி வீட்டு கந்தனுக்கு கடலைக்காய் போட்டது ... | 75 | 0 | 0 |
| சீட்டு பாபத்தில் ரங்கம்மாள் சேரவேண்டியது ... | 550 | 0 | 0 |
| நவகோண நாராயண ஐயருக்கு நிலம் விற்றதில் வந்தபாகம் | 849 | 5 | 4 |
| பட்டணம் பாப்பாத்தியம்மாள் வகை பட்டுசேலை ... | 173 | 0 | 0 |
| வைரமோதிரம் வாங்க வஞ்சிபத்தர் வசம் கொடுத்தனுப்பியது ... ... ... ... | 645 | 0 | 0 |
| ஆகமொத்தம் | 2292 | 5 | 4 |

இந்த புள்ளி விபரங்களைத் தவிர மற்ற விபரம் ஒன்றும் இல்லை என்று சொல்லி திருப்பித் திருப்பிப் பார்ப்பவர்போல் பார்த்து விட்டு

கடிதத்துண்டை மடித்து கையில் வைத்துக்கொண்டு அதி துரிதமாக வண்டியி லேறிக்கொண்டு தான் வந்தவழியே திரும்பிச் சென்றார். அங்குள்ளோரில் சிலர், இது என்னமோ சூது வியாபாரமாகத் தோற்றுகிறது என்றும், மற்றுஞ் சிலர் எல்லாம் இக்கலிகாலக் கோலம் என்றும், வேறு சிலர் பத்தில் ஒருவராக வந்தவர் கடிதத்தைப்பற்றிச் செல்லவேண்டிய காரணம் என்ன என்றும், வேறு பலர் படித்தவன் பித்தலாட்டம் செய்தான் என்றும், இன்னொரு சாரார் எது எப்படி யாயின் நமக்கென்ன உண்டு? நாம் நமது வேலையை கவனித்து காலங் கழிப்போம் என்றும் "கும்பெலிகள் வளை தோண்டா நதுபோல்" அவரவர்கள் மனம் போன படி பேசிவிட்டு சென்றனர்.

ஆனல் அக்கூட்டத்திலிருந்த ஒருவர் மாத்திரம் இது சாமார்த்திய மான வேலையாகவே இருக்கிறது. இதன் விருத்தாந்த மனைத்தும் நாம் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு, பிறர் காரியங்களையே மிக்க ஊக்கத்துடன் கவனிப்பதே தமது தொழிலாகக் கொண்ட தொழிலாளியைப்போல், வண்டியைத் திருப்பிச் சென்ற கனவானைத் தேடிப்பிடிக்க முயன்று தன்னுடைய துவிச்சக்கர வண்டியை (Cycle) வெகு வேகமாக நடத்திச் சென்றார். * * * *

* * * * * *

## "நமக் கென்ன வழி"

பாழடைந்த ஓர் சத்திரத்தின் ஓரத்தில் சுமார் பதினெட்டு வயதுள்ள அதி சௌந்தர்யமுள்ள பெண்ணும் சுமார் இருபத்தைந்து வயதுள்ள மற்றோர் ஸ்திரீயுமாக உட்கார்ந்திருந்தனர். இவ்விருவரில் சிறிய பெண்ணின் இலக்ஷணத்தை நோக்குங்கால், தாமரை மலரை யாசனமாகக் கொண்ட பிரமதேவர், தமது சிருஷ்டியின் வல்லமையைக் காட்டவே இவ்வுருவைத் தீட்டினரோ என்னும்படி யாகவே யிருக்கும். அதாவது, மிக்க மிருதுவாகிய அனிச்ச மலரின் மேல் வைத்தாலுங் குழைந்து வெப்ப மடைந்து, கொடிரேகை, மச்சரேகை முதலிய பல ரேகைகளைப் பொருந்தி, அழகில் செந்தாமரை மலரை வென்று சிவந்திருக்கின்ற உள்ளங்கால்களையும், பவளத்துண்டங்களினும் சிறந்து விளங்கும் பாத விரல்களையும், சந்திரனைப் பயமுறப்பணித்துச் சிறிது சிவந்த நிறமுடையனவாய் வெளுத்துவட்டமாகி ஒளி வீசுகின்ற பாதவிரல்களினது நகக் கூட்டங்களையும், குற்றமற்ற புறவடிகளையும், கைப்பந்துக் கொப்பாகி மிகப் பருத்திடலும் உயர்தலும் இல்லாது விளங்குகின்ற குதிக்கால்

களையும், கன்னிக்கதலியை யொத்து சிறந்திருக்கின்ற தொடைகளையும், நரம்புமுரோமமுங் கலவாது விளங்குகின்ற கணைக்கால்களையும், தாளத்தை யொத்துத் தசையைப் பொருந்தி மிக்க அழகுவாய்ந்திருக்கின்ற முழந்தாட்களையும், சிற்றெலியுரோமம்போன்ற நெருங்கிய மிருதுவான மயிர்கள் உள்ளோங்கி எழில் வாய்ந்திருக்கின்ற வயிற்றுமடிப்புக்களையும், பருத்து உயர்ந்துள்ள சகனத்தையும், கொங்கைகளால் வருத்தமெய்தி மெலிவுற்றிருக்கின்ற மருங்கினையும், என்பு, நரம்பு, உரோமம் ஆகிய இவைகள் தோற்றாமல் நடுவுமாழாமல் மிருதுவாகி இன்புறத்தக்க தசையைப் பொருந்திய விலாப்புறங்களையும், புடைபரந்து மேலெழுந்து, நீலமணி சேர்த்ததற்கொப்பாக இடைதோன்றாமல் நெருங்கிப் பெருமை பொருந்தி மார்பினிட முழுவது நிறைந்து தடையில்லாமற் பருத்துப் பூரித்துத் தம்முளிரண்டு மொத்து இடையினை வருத்தி நிமிர்ந்திருக்கின்ற ஸ்தனங்களையும், அழகு நிறைந்து திரண்டிருக்கின்ற வேய்போற் பிரகாசிக்குந் தோள்களையும், தசைதோன்றாதனவாகிய மூட்டுக்களையும், நீண்ட நரம்புகளும் உரோமங்களும் தோன்றாது வன்மைபொருந்திய மகாவீணையை யொத்த முன்னங்கைகளையும், வரிசையாகிய பலரேகைகள் தம்முணெருங்கி செவ்வாம்பல் மலரைப்போலப் பிரகாசிக்கின்ற உள்ளங்கைகளையும், நீலோற்பல முகையை வென்று சிவந்த நல்ல ரேகைகள் வாய்ந்த கைவிரல்களையும், பள்ளமாதலும், வெண்மையாதலும், நுணயில்லாமல் சாசரத்திருத்தலும், புள்ளியாகிய வெண்மைதோன்றலும், பொன்னிறமாதலுமில்லாது கிளியின் வாயினையொத்துச் சிவத்து பிரகாசிக்கின்ற கைவிரல்களினது நகக்கூட்டங்களையும், கமுகமரத்தினை நாணச்செய்து நான்கு அங்குலத்தோடு அழகுநிறைந்திருக்கின்ற கண்டத்தையும், இருபகுப்பாதலும், பள்ளமிசைதலும், நரம்பு முரோமமு மருவுதலும், குறுகுதலும், வளைந்திருத்தலும் இல்லாமல் இருவிரலளவில் வட்டமாய்த் தசையை யுடைத்தாய் எழில்கொண்டு இன்பந் தருவனவாகிய மோவாயினையும், சிறந்த பவளத்துண்டுபோற்றிரண்டு இருபக்கமுங் குவிந்துமுள்ள கீழுதடும், அதற்குமேற் சற்றுயர்ந்து வனப்பு வாய்ந்திருக்கின்ற மேலுதடும், மேலுதடும் கீழுதடும் ஒத்து சிறந்திருக்கின்ற வாயினையும், மயிலிறகினடிகளையும், முல்லை யரும்புகளை யொத்து, வெண்மையாகவும் திருத்தமாகவு மிருக்கின்ற பற்களையும், கடினமும் வெண்ணிறமுங் கருமையும் நீட்சியும் பருத்தலும் விலகலும் இல்லாமற் சிவந்த வண்ணமாய் மிருதுவாயிருக்கின்ற நாவினையும், துளைகள் சிறந்து

(தொடரும்.)

ப. சு. போ. அகத்தீஸ்வர முதலியார்,

இராணி வைத்தியசாலைத் தலைவர், இராணிப்பேட்டை.

# அங்கும் இங்கும்.

114 பாஷைகள் அறிந்தவர்:—வாஷிங்டன் நகரத்தில் சமீப காலத்திலிருந்த ப்ரொபெஸர். ஜே. ஆர்னர் என்பவருக்கு 53 பாஷைகள் தெரியுமாம்.

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பெண்கள் சுதந்தரமின்றி யிருக்கையில் இடாலி தேசத்திலிருந்த மேயிரா கெயிட்டாணு அக்ஸை என்னும் பெண்மணி அநேக பாஷைகளில் அறிவுடையவரா யிருந்தார். அவர் தம் ஒன்பதாம் வயதில் லத்தீன் பாஷையில் பிரசங்கம் புரிந்தார். பன்னிரண்டாம் ஆண்டில் கிரீக், ஹிப்ரு, பிரெஞ்சு, ஜெர்மன், ஸ்பெயின் முதலிய பல பாஷைகள் அவருக்குத் தெரியும்.

ஜார்ஜ்பாரோ என்பவருக்கு அநேக பாஷைகளில் பயிற்சி யுண்டு. அவருக்கு சுமார் 30 பாஷைகள் தெரியுமாம்.

இவர்களெல்லாரையும் விட மிகவும் அறிவுள்ளவர் ஜோஸப் கிஸ்பார்டோ மெஸபாண்டி என்பவர். இவர் ஒரு தச்சனுடைய குமாரர். அவருக்கு 114 பாஷைகள் தெரியும். பாதி பாஷைகளில் கவிகள் புனைவார்; நூல்களெழுதுவார்; நன்றாகப் பேசுவார். (தமிழ் சுயராஜ்யா).

குசேலர் பாக்கியம்:—இங்கிலாந்தில் நாட்டிங் ஹில்கேட் என்ற ஊரில் ஓர் ஆஸ்பத்திரியில் சென்ற ஜனவரி மீ பேகர் என்னும் சீமாட்டி தன 45-வது வயதில் 23-வது குழந்தையைப் பெற்றாளாம். இவ்வளவு குழந்தைகளும் ஒரே ஆஸ்பத்திரியில் ஒரே அறையில் ஒரே விடத்தில் பிறந்தனவாம். அச்சீமாட்டி கொஞ்சமும் தளர்ச்சியடையாமல் திடசரீரியாகவே இருக்கிறாளாம். மிகவும் ஏழையாக விருந்தபோதிலும் அவள் 23 குழந்தைகளையும் யாதொரு வியாதியு மணுகாமலும் சாக்கிரதையாகவும் பராமரித்து வருகிறாளாம். தனக்கு அவகாசமான நேரங்களில் தன் புருஷனுடைய பழக்கடையில் அவனுக்கு உதவிசெய்கிறாளாம்.

# பஞ்சாங்கம்.

## குரோதன ௵ ஆனி ௴

### இங்கிலீஷ் 1925 ௵ ஜூன் ௴—ஜூலை ௴

| ஆனி ௴ | ஜூன் ௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | ஞா | அ0-3<br>நவ58-30 | உத்49-48 | அமி60 | மிதுனரவி நா-16-43 ஷட சீதிபுண்யகாலம், கரிநாள் |
| 2 | 15 | திங் | தச58-28 | ரேவ50-45 | சித்60 | மாடுவாங்க, கிரபிரவேசம் |
| 3 | 16 | செ | ஏ59-33 | அசு53 25 | சித்60 | ஸ்மார்த்த ஏகாதசி |
| 4 | 17 | புத | துவா60 | பர57·23 | சி57-23அ | வைஷ்ணவ, மத்வஏகாதசி |
| 5 | 18 | வியா | துவா1-53 | கிரு*60 | மர60 | பிரதோஷம், கிருத்திகை |
| 6 | 19 | வெ | திர5-20 | கிரு2-20 | சி2-20மர | கரிநாள், மாசசிவராத்திரி |
| 7 | 20 | சனி | ச 9-48 | ரோ8-13 | அ8-13சித் | சர்வத்திர அமாவாசை |
| 8 | ஜூன் ௴ 21 | ஞா | அமா15-0 | மிரு15-3 | சித்60 | |
| 9 | 22 | திங் | பிர20-55 | திரு22-28 | சி22-28அ | |
| 10 | 23 | செ | துதி27-18 | புன30-10 | சித்60 | |
| 11 | 24 | புத | திரி33-50 | பூசம்38-10 | சித்60 | |
| 12 | 25 | வியா | சது40-3 | ஆயி45-45 | சி45-45அ | |
| 13 | 26 | வெ | பஞ்45-33 | மகம்52-43 | ம52-43சி | |
| 14 | 27 | சனி | சஷ்49-53 | பூரம்58-25 | சி58-25ம | |
| 15 | 28 | ஞா | சப்52-38 | உத்60 | அமி60 | |
| 16 | 29 | திங் | அ53-28 | உத2-30 | சித்60 | |
| 17 | 30 | செ | நவ52-20 | அஸ்4-50 | சித்60 | |
| 18 | 1 | புத | தச49-8 | சித்5-3 | சித்60 | லக்ஷ்மி விரதாரம்பம |
| 19 | 2 | வியா | ஏ44-10 | சுவா3-23<br>விசா59-50 | அ3-23சித் | சர்வ, மத்வ ஏகாதசி, சயன ஏகாதசி, அவமாகம் |
| 20 | 3 | வெ | து37-35 | அனு54-48 | சி54-48ம | கோபத்ம விரதாரம்பம் |
| 21 | 4 | சனி | திர29-40 | கேட்48-30 | சித்60 | மாடுகொள்ள |
| 22 | 5 | ஞா | ச 20-40 | மூல42-33 | அ42-33சி | பௌர்ணமி, ஹரிசயனம் |
| 23 | 6 | திங் | பவு11-20 | பூரா34-5 | மர60 | போதாயன சூத்திர சர்வ உபாகர்மம் |
| 24 | ஜூலை ௴ 7 | செ | பிர1-58<br>துதி52-50 | உத்26-48 | அ26-48சி | ஆஷாடபகுளம், சாதுர் மாஸ்யதுதிய, அவமாகம் |
| 25 | 8 | புத | திரி44-23 | திரு20-3 | சி20-3பிர | அவமாகம் |
| 26 | 9 | வியா | சது36-55 | அவி14-13 | சி14-13ம | வியாதிஸ்தர் குளிக்க |
| 27 | 10 | வெ | பஞ்30-50 | சதை9-35 | சித்60 | விவாகம், ஸர்வமுகூர்த்தம் |
| 28 | 11 | சனி | சஷ்26-25 | பூரட்6-25 | மர6-25சி | ஏற்றம் ஸ்தாபிக்க |
| 29 | 12 | ஞா | சப்23-40 | உத்5-0 | அமி60 | காதுகுத்த, வித்யாரம்பம் |
| 30 | 13 | திங் | அ22-48 | ரேவ5-25 | சித்60 | பிரயாணம் விலக்க |
| 31 | 14 | செ | நவ23-38 | அஸ்7-28 | சித்60 | |
| 32 | 15 | புத | தச26-0 | பர*11-13 | சி11-13அ | கிருத்திகை |

| | | | |
|---|---|---|---|
| | | புத | சூரி சுக் |
| | 1-கட-செவ்<br>4-மிது-புத | | செ ராகு |
| கே | 14-கட-சுக்<br>18-கடக-புத | | |
| குரு | | சனி | |

**ஏன்கஷ்டப்படுகிறீர்கள்?**

**ஒருமுறைபரீக்ஷியுங்கள்!**

"ஜெயவீர சுவாசகாச பஸ்பம்"

நிகரற்ற **"ஆஸ்த்மா"** மருந்து.

'ஆஸ்த்மா' (asthma) என்னும் 'சுவாசகாச' நோயானது மிகவும் கொடியதென்பது யாவருக்கும் தெரிந்தவிஷயம். அது மனிதர்களை சித்திரவதை செய்துகொல்லும். இக்கொடிய நோயைப் போக்குவதில் எங்கள் 'ஜெயவீரபஸ்பம்' நிகரற்றது. இது அனுபவமான மருந்து. அநேகமருந்துகளைச் சாப்பிட்டும் குணமாகாமல் எங்கள் ஜெயவீரபஸ்பத்தால் எத்தனையோபேர் குணமடைந்திருக்கின்றனர். 15 நாளில் பூரண குணங்காணலாம். ஒரு முறை பரீட்சித்தால் உண்மை விளங்கும்.

15 நாள், 30 வேளை மருந்து ரூ. 6—0—0 தபாற்சார்ஜ உள்பட.)

வி. பி. யில் அனுப்பவிரும்புவோர் ரூ. 2 முன்பணமாக அனுப்ப வேண்டும்.

உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

மானேஜர்,

**ஜீவசகாய கம்பெனி,**

சோல் ஏஜண்டுகள்,

சித்தூர் (தென் இந்தியா).

---

**தேவை** **தேவை**

நமது 'சன்மார்க்க பானு' விற்கு சந்தாதார்களைச் சேர்க்க தமிழ் நாடெங்கும் ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் தரப்படும். முயற்சியுடையவர்கள் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்குமேல் சம்பாதிக்கலாம். விசேஷத்திற்கு உடனே எழுதுங்கள்.

பத்திராதிபர்,

**"சன்மார்க்கபானு,"**

ராணிப்பேட்டை (வட ஆற்காடு).

## புத்தக விளம்பரம்.

திருக்குறள்-பதவுரை, பொழிப்புரை, விருத்தியுரை, இங்கிலீஷ் உரையுடன்,

(சென்னை, வேதாந்த தர்க்க போதகாசிரியர் ஸ்ரீமான் கோ. வடிவேல் செட்டியார் இயற்றியது) 2-வால்யம் ... ரூ. 8—0—0

கைவல்ய நவநீத வினவிடை

(ஷையார் இயற்றியது) ... ... ரூ. 2—8—0

பகவத்கீதை வசன வினவிடை ஷை ஷை ரூ. 1-12—0

மெய்ஞ்ஞானபோதம் ஷையார் லோகோபகாரியில் எழுதியது ... ... ... ... ... ரூ. 0-12—0

விவேகாநந்தர் உபன்யாச ஞானத்திரட்டு ரூ. 1—0—0

வியாச தாத்பர்ய நிர்ணயம் ... ... ரூ. 0-12—0

சசிவர்ணபோதம் ஆசிரியர் கோ. வடிவேல் செட்டியார் எழுதியபதவுரை, பொழிப்புரை, விசேடவுரையுடன் கூடியது 0-12—0

விவேக சூடாமணி ... ... ... ரூ. 0-12—0

மநீஷாபஞ்சகம் ... ... ... ரூ. 0—5—0

மகாராஜா துறவு-வசனம் ... ... ரூ. 0—3—0

தேசிங்குராஜன் ... ... ... ரூ. 0—6—0

நாகாஜீவ வாதக்கட்டளை (தமிழ்) ... ரூ. 0—4—0

ஷை (தெலுங்கு) படத்துடன் கூடியது .. ரூ. 0—3—0

காரியசித்தியின் இரகசியம் ... ... ரூ. 0—3—0

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

"சன்மார்க்கபானு" ஆபீஸ்,

ராணிப்பேட்டை (வ. ஆ.).